உ
சிவமயம்

News paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெ[illegible] யிணையடி [நீழலே.]

புத். ருகு] யாழ்ப்பாணம்—சர்வசித்துஹு சித்திரைமீ கஉ உ (1947 ஏப்பிரல் 25 வெள்ளிக்கிழமை) [இல ௱

## தமிழாக்கப்பணி

### அதனை ஆர்வத்துடன் ஆற்றுவோம்

இந்த நூற்றாண்டு உரிமைவெறி பிடித்த ஓர் ஆண்டு. ஒவ்வொரு மக்கட்கூட்டத்தினரும், தங்கள் மொழி-நாகரீகம்-அரசியல்-பொருளாதாரம்-வழிபாட்டுமுறைகள் என்பவற்றையெல்லாம் கலைப்பண்புடன் கலந்து ஆராய்ந்து நிலைநாட்டுகின்ற நூற்றாண்டு. தமிழ்மொழியைப் பேசிய மக்களின் நாகரீக-பண்பாடு-கலைத்தேட்டம்-வழிபாட்டுமுறைகள் என்பவற்றை மேலைநாட்டுப் புலவர்கள் சிறந்த முறையில் ஆராய்ந்து வருகின்றார்கள். தமிழனின் நாகரிகம் மிக மிகப் பழமையானது என உலகமே ஒப்புக்கொள்கின்றது. இந்திய இடைக்கால அரசியலில் தாய்மொழிக் கல்விக்குச் சிறந்த தலைமைவழங்கியிருக்கின்றார்கள். பாட்னா-இலட்சுமணபுரி-நாகபுரி எனும் பல்கலைக் கழகங்களில் தாய்மொழிவாயிலாகவே கலைகள் யாவுங் கற்பிக்கப்படுகின்றன. இத்தகைய உரிமைகளைப் பெற்று மகிழும் இன்றைய உலகில் தமிழ் மக்களும விழித்துக்கொண்டனர். தமிழ் ஆக்கப் பணிபுரியும் ஆர்வத்துடன் அறைகூவி அழைக்கின்றார்கள். நாங்களும் அன்னைக்கு ஆகவேண்டிய ஆக்கப்பணிகளை ஆற்ற முற்படவேண்டும். எங்கள் பிறப்புரிமையான தமிழை—எங்கள் குருதியில் கலந்து பிரிவின்றி விளங்குங் கலைத்தமிழை நாங்கள் ஆக்கவேண்டும்.

தமிழ், கலையூற்றம் உடையது. தன்னைக் கற்றவா உள்ளத்தைக் கவரும் ஆற்றல் உடையது. வீரமாமுனிவர்—போப் முதலிய மேலை நாட்டுப் புலவர்கள் தமிழ்த்தொண்டு செய்துள்ளார்கள், தமிழ்ப்பெருங் காவியங்களும் இயற்றி இருக்கின்றார்கள், தமிழ்மொழி ஆராய்ச்சி நூல்கள் பல ஆக்கிஉள்ளார்கள். அவர்களை யெல்லாம் தமிழ்மொழி ஆட்கொண்டுவிட்டது. இன்றுந் தமிழை மிக உணர்ச்சியுடன் ஆராய்கின்றவர்கள் மேலைநாட்டுப் புலவர்களே. தமிழ்வாழ்வு பெற்ற நாங்கள் ஏன் தமிழ்ப்பணி ஆற்றக்கூடாது? தமிழ் ஆராய்ச்சி நூல்களைஏன் ஆக்கக்கூடாது? மொழி ஆக்கமின்றி ஓர்நாடு உரிமை வாழ்வு பெற முடியாது. கலைத்தேட்டங் காண முடியாது. நாங்கள் மொழியாக்கத்தொண்டை மிக ஆர்வத்துடன் ஆற்றுவோம். எங்கள் தமிழ் அன்புக்குரலைக் கடல் கடந்து ஒலிக்கச் செய்வோம் என்று வேலணைத் தமிழ்க்கழகச் செயலாளர் வித்வான் க. வேந்தனார், ஷை கழக ஆரம்ப விழாவில் செய்த தம பிரசாரணத்திற் குறிப்பிட்டார்.

### எல்லைப்புறக் கலவரம்

ஜின்னாவும், காந்தியடிகளும் சேர்ந்து விடுத்த சமாதான அறிக்கைக்குப்பின்னரும் லீக்கர் தம் காடைத்தனத்தை விடவில்லை. எல்லைப்புற மாகாணத்தில் நிலைமை மோசமாகவிட்டது என்றும் அதனை நேரே பார்த்தறிய இராஜப்பிரதிநிதி அங்கே போய்விட்டார் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

## ஏற்றுமதி இறக்குமதி

### 3 மாத விபரம்

1947-ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலும் இலங்கையரசாங்கத்துக்கு ஏற்றுமதிஇறக்குமதிவரிமூலம் 52,440,026ரூபாவருமானம் கிடைத்திருக்கிறது. இத்தொகையில் இறக்குமதி வரிமூலம் 41,815,961 ரூபாவும் ஏற்றுமதி வரிமூலம் 10,545,478 ரூபாவும் வேறும்வழிகளால் 75,586 ரூபாவும் கிடைத்துள்ளன.

தேயிலை ஏற்றுமதி வரிமூலம் கடந்த மூன்றுமாத காலத்துக்கிடையில் 7,515,085 ரூபா கிடைத்திருக்கிறது.

றப்பர் ஏற்றுமதி மூலம் 266,774 ரூபா கிடைத்திருக்கிறது,

குறித்த மூன்றுமாத காலத்திலும் உணவுப் பொருள்கள், குடிவகைகள் புகையிலை என்பவை 106,000,000 பெறுமதிக்கு இறக்குமதியாயிருக்கின்றன.

அவற்றின் விபரம் வருமாறு:

பார்லி, பருப்புவகை: 290,077 அந்தர், ரூ. 9,339,878: அரிசி 2,119,104 அந்தர். ரூ 29 026,746; கோதுமைமா 1.101,983 அந்தர், ரூ. 12,009,464; பீர் முதலாம பானங்கள்: 2459½ கலன் ரூ. 248,990; விஸ்கோத்து 295,545 ருத்தல், ரூ. 442,225; பாற்கட்டி 440,009 ருத்தல், 388,290; பாற்கட்டி (தகரத்தில்) 88 110 இருத்தல் ரூ 98,495 மிளகாய், மல்லி முதலியவை 104,457 அந்தர ரூ. 5,160,157; வெங்காயம்180,305 அந்தர் ரூ. 1,930,943; உருளைக்கிழங்கு 111,205 அந்தர், ரூ. 3,091,212 பால் உணவு 1,392 973 இருத்தல், ரூ 2,918,073; முட்டை 958 991 இருத்தல் ரூ 135,833; இவற்றைவிட 570,937. ரூபா பெறுமதியான 1,669,414 கலன் மண்ணெய்யும் குறித்த 3 மாத காலத்துக்கிடையில் இறக்குமதியாய் இருக்கிறது.

### லண்டனில் ஹிந்து ஆலயம்

லண்டனில் ஓர் ஹிந்து ஆலயம் அமைக்க ஐரோப்பிய ஹிந்துமகாசபை தீர்மானித்திருக்கிறது. இதற்கு 10,000 பவுண் செலவாகும் என்று தெரிகிறது. இதற்கான நிதியைத் திரட்டுதற்கு ஷை மகாசபைத் தலைவரான ஸ்ரீஜுத் பார்த்தி என்பவர் இந்தியாவுக்கு இப்போது போயிருக்கிறார்.

லண்டனில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர், யூதர் என்பவர்களுக்கெனப் போதிய ஆலயங்களும் மசூதிகளும் உண்டு. ஆனால் லண்டனில வதியும் ஹிந்துக்களுக்கென ஓர் ஆலயமேனும் ஓர் சபக நிலையமேனும இல்லாதிருப்பது வருந்தத்தக்க ஓர் விஷயம் என்று ஸ்ரீஜுத் பார்த்தி தெரிவிக்கிறார்.

## ஊரவர் ஒத்துழைப்பு

### பொலிஸ் தலைவரின் வேண்டுகோள்

இந்த ஏப்ரல் மாதம் 21-ம் திகதிக்கிடையில் இம்மாதத்தில் 45 கொலைகள் இலங்கையில் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றுட் 14 கொலைகள் ஐந்தே ஐந்துநாட்களில் நிகழ்ந்தன. இது ஆபத்தான ஓர் நிலை என்று இலங்கைப் பொலிஸ் தலைவர் மிஸ்ரர் R. அலுவிகாரை ஓர் பத்திரிகை நிருபரிடம் கூறினர்,

பொலிசார் எவ்வளவு முயற்சி செய்தபோதிலும் ஊரவர் ஒத்துழைக்காவிட்டால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், குற்றங்கள் பெருகுவதைத் தடுக்கவும் முடியாது. இந்த இலங்கையிற் காடையர் கொட்டத்தை அடக்கவேண்டும். சண்டியர் அக்கிரமத்தை ஒழிக்க வேண்டும். ஒளித்துப் பதுங்கித் தாக்கிவிட்டு ஓடும் பயங்கொள்ளியை — கோழையை அகப்படுத்தித் தண்டிக்கவேண்டும். இவற்றை நான் செய்வதற்கு ஊரவர் தம் மனப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்கவேண்டும் என்று மிஸ்ரர் அலுவிகாரை கூறுகிறார்.

1945-ம் ஆண்டில் இலங்கையில் எல்லாமாக 592கொலைகளும், 1946ம் ஆண்டில் 543 கொலைகளும் நிகழ்ந்தன. 1947-ம்ஆண்டின் முதல்மூன்று மாதங்களிலும் 135 கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன.

## அல்லி ராஜ்யமா?

### உலகில்இனிநிகழ்வது

இலங்கை இந்தியக் காங்கிரசின் 8-வது மகாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஸ்ரீஜுத் வி. வி. கிரி, இலங்கை இந்தியக் காங்கிரஸ் மாதர் சங்கத்துக் கூட்டத்திற் சென்றவாரம் பேசுகையில், உபாத்திமைத் தொழிலிலும், ஏனைய பல தொழில்களிலும் ஆடவர்களிலும் பார்க்கப் பெண்களே திறமையாக இருப்பர் என்று கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

இப்போது பெண் இனத்துக்கு வேண்டிய அந்தஸ்துக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் இந்த நிலைமை இன்னும் அதிக காலத்துக்கு நிற்கமாட்டாது. உலகத்தின் அரசியலை நிர்வகிக்கும் பொறுப்பு பெரும்பான்மையும் பெண்களையே சாரப்போகும் காலம் ஒன்று சிக்கிரத்தில் வரவிருக்கிறது. உலகத்தின் இராஜதந்திரிகள், மந்திரிகளில் 100-க்கு 60 அல்லது, 70 விகிதமானவர்கள் இனிப் பெண்களாகவே இருப்பர்.

"பெண்கள் அதிகாரத்துக்கு வந்தால்தான் உலகில் சண்டைகளும், யுத்த பயமும் இல்லாமற் போகும். உலகிலே சமாதானம், சாந்தி என்பவற்றை நிறுவ ஆண்கள் தவறிவிட்டார்கள்."

## தேர்தலிற் காடையர்

### அடக்கப் பொலிசார் உறுதி

அடுத்துவரும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலின்போது கலகங்கள் போன்ற அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழாமலிருப்பதற்குப் பொலிஸ் பகுதியார் ஜரூராக முன்னேற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

தேர்தலின்போது சமாதானத்தைப் பாதுகாக்கும் பகுதிக்கு மிஸ்ரர் பீ. ஐ. எம். வர்வின் என்னும் பொலிஸ் அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார் அவர் இலங்கையின் பலபகுதிகளுக்கு விஜயம்செய்து, ஒவ்வோர் பகுதியிலும் செய்யவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்துவருகிறார்,

காடையர் உபத்திரவமும், மதுபானிகள் சஞ்சாரமும் தேர்தற் காலத்தில்சகஜமாவதுவழக்கம். சட்டத்தை மீறிப்பொதுஜனங்களுக்குத் துன்பம் விளைப்பவர்கள்மீதும அப்பொதுஜனங்களைப்பலாத்காரம் மூலமாகத் தாம் விரும்பும் அபேட்சகர்க்கே வாக்களிக்கும்படி நிர்ப்பந்திப்பவர்கள்மீதும் பொலிசார் தகுந்தநடவடிக்கை எடுப்பர்என்றுதெரிகிறது இவ்விஷயத்திற்குஎப்பகுதியில் உள்ள பொலிசார் தொகை போதாதெனக் காணும்பட்சத்தில், உடனே அப்பகுதிக்குவேண்டிய பொலிசாரைக் கொழும்பில் இருந்து அனுப்பத் தகுந்த முயற்சிகள் செய்யப்படுமாம்.

உள்நாட்டு மந்திரி ஸ்ரீ அ. மகாதேவா. தேர்தற் காலததல் காடையர் அக்கிரமம் பரவாமலிருக்கத் தகுந்த நடைவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொலிஸ் பகுதியினர்க்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்று தெரிகிறது.

### இந்தியாவின் நிலை

பலஸ்தீனப் பிரச்சினை ஐக்கியதேசஸ்தாபனத்தில் இன்னும் சில தினங்களில் விவாதிக்கப்பட இருக்கிறது. ஷை ஸ்தாபனக் கூட்டத்துக்கு இந்தியாவின் பிரதிநிதியாக, அமெரிக்காவில் இந்திய இராஜரீகத்தூதராகவுள்ள ஜனப் ஆஸப் அலி சமுகம் அளிப்பர். இந்தியா, அரபுநாடுகளின் கட்சியையே அநேகமாக ஆதரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அ[illegible]மே
சூழ்க வையக முந்துயர் [illegible]

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
சித்திரைமீ கஉ உ வெள்ளிக்கிழமை

## கொலை அதிகப்படுதல்

சென்ற வருடப்பிறப்பு வாரத்திலே மாத்திரம் இலங்கையில் 18 நரகொலை நேர்ந்தவென்றும், இந்த 1947-ம் ஆண்டின் முதல் நான்கு மாசங்களும் முடிவதற்கிடையில் 180 கொலை நடைபெற்றதென்றும் இப்பொழுது தெரிவிக்கப்படலாயிற்று; இது பயங்கரமான ஒரு செய்தியாகும்; இலங்கையிலே காலந்தோறும் கொலை களவு மதுபானம் முதலிய மகாபாதகங்கள் அதிகப்பட்டு வருகின்றனவேயொழியக் குறைந்தபாடில்லை; இவ்வாறு கொலை முதலாம் பெருந் தீமைகள் அதிகப்படுதற்குப் பலர் பலவாறுன காரணங் காட்டுகின்றனர்; கொலை களவு முதலிய தீமைகள் நேரவொட்டாது தடுத்தற்கு இலங்கையிலே போதிய அதிகாரமும் வல்லமையுமுள்ளபொலிஸ்படையில்லையென்கின்றனர் சிலர்; இன்னுஞ் சிலர், இக்குற்றங்கள் இப்படி அதிகப்பட்டு வருதற்காகிய ஏது ஊரிலே இக்காலத்தில் நேர்ந்துள்ள பொருட்பஞ்சம் பணப்பஞ்சம் உத்தியோகமின்மை முதலியனவெனக் கூறுகின்றனர்; வேறுசிலர் இப்படிப்பட்ட அக்கிரமங்கள் அதிகப்பட்டு வருதற்கு நியாயம் சமயநூற்கல்வி, சமயவொழுக்கம் தெய்வநம்பிக்கை முதலியன இக்காலத்திலே தேய்ந்து வருதலேயென அபிப்பிராயப்படுகின்றனர்; ஒழிந்த சிலர் தொழிலாளர் முதலாளிகளென்ற பகுப்புப் பேதத்தினல் எழுந்த பிணக்குத்தான் என எண்ணுகின்றனர். மற்றுஞ் சிலர் விபரீத நாகரீகம் முற்றியமையே இவ்வனாத்தமெல்லாவற்றிற்கும் மூலகாரணமெனப் பகருகின்றனர். மதுபானம் மிகுந்தமையும் கொலை முதலாந் தீய செயல்களுக்கு ஒரு ஏதுவெனச் சிலரினுஞ் சில ரெண்ணுகிருர்கள். இன்னும் பலர் பலவாருக இத் தீமைகள் அதிகப்படுதற்குக் காரணங் காட்டுகின்றனர்.

கொலை முதலிய தீமைகள் காலந்தோறும் இந்நாட்டிலே அதிகப்பட்டுவருதற்கு மேலே சொல்லப்பட்ட காரணங்களுட் பல நிசமானவை; ஆனல் அவைகள் மாத்திரந்தாம் கொலை முதலாங் குற்றங்கள் அதிகப்படுதற்குப் பிரதான காரணங்களாகுமோ என்பது ஆராயத்தக்கது; பொலிஸ்படையை அதிகரிக்கச் செய்வதனற் கொலை முதலிய குற்றங்கள் இல்லாதொழியுமென வெண்ணுதல் தக்க ஞாயமன்று; இங்குள்ள பொலீசர் ஊரவர்களைக் குற்றஞ்செய்யவொட்டாது முந்தியே தடுத்தற்காகிய முறையிற் பயிற்றப்பட்டிலர்; இப்பொலிசர் கொலை நடந்தபின்னும், களவுபோன பின்னும், சண்டை முதலாம் அநர்த்தங்கள் விளைந்த பின்னும் அந்தந்த இடங்களிற்குப் போய் அவற்றைப்பற்றி விசாரித்துத் திரியவும், இன்னும் இவை போன்ற செயல்களைச் செய்யவுமே பயிற்றப்பட்டிருக்கிருர்கள்; மேலும், இங்குள்ள பொலிசர்கட்கும் ஊரவர்கட்குமிடையில் ஒத்துழைக்குமியல்பைக் கண்டிலேம்; இந்த ஒத்துழைப்பு வந்து கைகூடும்வரையிற் பொலிசர் மூலமாகக் குற்றங்கள் குறையுமென நாம் எதிர்பார்த்திருத்தலிற் பயனில்லை யெனலாம்; இலங்கையிலுள்ள பொலிசர் மேனட்டு முறையிற் பயிற்றப்படுவரேல் இப்பொலிசரால் ஏதும் நன்மையுண்டாகுமென நாம் காத்திருக்கலாகும். கொலையதிகரித்தற்குக் காரணமாகச் சொல்லப்படுவனவற்றுள், தத்தம் சமயநூலறிவில்லாமை, சமயக் கொள்கைகளைக் கைக்கொண்டு நடவாமை, இங்குள்ள சாதியினரும் சமயவாதிகளும் தங்கள் பழைய ஆசார ஒழுக்கங்களை அறவே கைவிட்டுத் தெய்வத்தில் நம்பிக்கைகெட்டு நாஸ்திகம் பேசவும் தொன்மை மரபையும் பெரியாரையும் அவமதிக்கவுந் தலைப்பட்டமை, நீதிநூல்களைக் கல்லாமை முதலியன கொலை யதிகப்படுதற்கு ஏதுவெனச் சொல்லத்தக்கனவாம்

இக்காரணங்களெல்லாவற்றிலும், இக்காலத்திலே கொலையதிகப்பட்டு வருதற்குப் பிரதான காரணம் சென்ற இரண்டாவது மகாயுத்த காலத்தும், இந்த யுத்தம் முடிந்ததாகிய பிற்காலத்திலும்நடந்த கணக்கிறந்த அநியாய உயிர்க்கொலைகளேயாம்; யுத்தம் முடிந்து வெற்றியும் போலிச்சமாதானமும்உண்டான பின்னரும் யுத்தக் குற்றவாளிகளெனக் காணப்பட்டுச் சிறந்த சுதேச அபிமானிகளும் தம்முயிரைத் திரணமாக மதித்த சூரர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள்; இந்தியாவிலே இன்றைக்கும் பெரும் சாதிச் சண்டை சமயச்சண்டை பல்லாயிரக்கணக்காக நரக்கொலைகள் நடப்பதற்கும் முதற்காரணம் சென்ற உலகமகாயுத்தத்திலும் அதன் பின்னரும் நடந்த நடக்கின்ற படுகொலைகளாம். இவைகளைக் கண்டு மனுஷர் நரரைக் கொல்வதாகிய செயலை, ஒரு அற்பகுற்றமாக நினைக்கத்தலைப்பட்டுக்கொண்டான்; ஒரு உயிரை ஆக்கமுடியாதவன், அதனையழிக்க நினைக்கவுமொண்ணுது என்பது ஆப்தவாக்கு. படுகொலை செய்தவர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கவொண்ணுது அவர்களைச் சதா சிறைத்தண்டனையிலிட வேண்டுமென்று மேலைத்தேசத்திலே நல்ல எண்ணம் பிறந்துவந்த காலத்திலே, இந்த இரண்டாம் உலகயுத்தம் தொடங்கித்தான் அணுக்குண்டைக் கண்டுபிடித்து இரண்டு ஊர்களிலேயுள்ள சராசரங்களையெல்லாம் ஒருங்கு சங்காரஞ் செய்து அந்த இடத்தையும் வறுத்த மண்ணுக்கி, அந்த ஊர்க

# இன்னேர் - - - - வேலைநிறுத்தம்!

## சலவைத் தொழிலாளர் குறைகள்

சகல தொழிலாளரும் வேலைநிறுத்தம் செய்யும் காலம் இது. எனவே யாழ்ப்பாணத்தில் உள்ள சலவைத் தொழிலாளரும் சென்றசனிக்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தம் செய்து புதன்கிழமைவரை தம் தொழிலைச் செய்யாது விட்டனர்.

சலவைத் தொழிலாளர்க்கு வேண்டிய "சோடா" யுத்த காலத்துக்கு முன் அந்தர் ஒன்று 6 ரூபாவரை விற்றது. யுத்தம் தொடங்கியபின்னர் இதன் கட்டுப்பாட்டு விலை 15 ரூபாவாகவிருந்தும், அந்த விலைக்கு அதனைப் பெறுதல் அரிது. அந்தர் ஒன்று 100 ரூபாவரையும் சோர வியாபாரிகளினுல் விற்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சோடாவிற்கும் தனி உரிமையாளர் அப்துல் ஹூஸெயின்ஜாபர்ஜி என்னும் சமுதாயத்தினராகும். இவர்களுக்குச் சென்ற நவம்பர்மாதம் தொடக்கம் சோடா கிடைக்கவில்லையாம், சென்றவாரம் ஓர் தொகை — ஏறக்குறைய 100 மூடை — சோடாக் கிடைத்தது. இதனை ஆள் ஒன்றுக்கு 5 இருத்தல் விகிதம், மேற்படி சமுதாயத்தினர் சென்ற வியாழக்கிழமை சலவைத் தொழிலாளர்க்கு உதவினர். சென்ற சனிக்கிழமையும் இதே விகிதப்படி வழங்கப்பட்டது. இந்த முறை மேற்படி தொழிலாளர்க்கு அதிர்ப்தியைக் கொடுத்தது. அவர்கள், தங்கள் சங்கம் மூலமாகவே தங்களுக்கு வேண்டிய சோடாவைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டனர். இதற்குச் சமுதாயத்தினர் மறுக்க, சலவைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி முதலாம் இடங்களில் உள்ள அழுக்குத் துணிகளைத்தானும் சலவைசெய்ய அவர்கள் மறுத்தனர்.

மாகாணத் தலைவரும், உதவிமாகாணத் தலைவரும், தொழிலாளர் சார்பாக ஸ்ரீ ஸீ, தர்மகுலசிங்கமும் மேற்படி வர்த்தகச் சமுதாயத்தினரும் இப்போது ஓர் ஒழுங்கிற்கு வந்துவிட்டனர். அதாவது, அப்துல் ஹூஸெயின் ஜாபர்ஜி சமுதாயம் தமக்கு வரும் சோடாவில் நூற்றுக்கு 40விகிதத்தை, மாகாணத் தலைவர் அளிக்கும் "பெர்மிற்"படி சலவைத் தொழிலாளரின் உபயோகத்துக்குக் கொடுப்பர். மீதி 60 விகிதத்தையும் அவர்கள் தங்கள் இஷ்டப்படி தங்களுடைய வாடிக்கைக்காரரான சில்லறை வியாபாரிமார்க்கு விற்கலாம். இந்த ஒழுங்கின் பயனக, வேலைநிறுத்தம் சென்ற புதன்கிழமையுடன் தவிர்க்கப்பட்டது.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—12)

"என் அருமையான அண்ணனுடைய கடிதம்"

தன் தமையனுக்கு எழுதிய கடிதத்திற்கு, நாட் பல சென்றும் பதில் வரவில்லையே யென்று சிவபாக்கியமும், தன் மகனுடைய சுகத்தைப் பற்றி ஒன்றும் அறியமுடியவில்லையே யென்று கண்ணகியம்மையும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், ஒருநாள் மத்தியான வேளையில் கடிதம் கொடுப்பவன் தங்கள் வீட்டிற்கு வரக்கண்ட சிவபாக்கியம், அவன் நீட்டிய கடிதத்தை 'இது என் அருமையான அண்ணனுடைய கடிதம்" என்று சந்தோஷத்துடன் சொல்லிவிட்டுத்தாயிடம்ஓடிப்போய் "அம்மா, அண்ணுவின் கடிதம் வந்துவிட்டது" என்று ஆநந்தத்தோடு சொல்ல, அடுக்களையிலிருந்த தாய், "நல்ல காரியம்மகளே, இப்படியிருந்து "பெலத்து வாசி, நானும் கேட்க" என்று முகமலர்ச்சியோடுசொல்ல, மகள் வாசிப்பாளாயினள்:

"ஆண்டவனருளால்வாழும் எங்கள் தாயாருக்கு நமஸ்காரஞ்செய்து எனது அருமைத் தங்கையை வாழ்த்தி எழுதிக்கோள்வது: நான் இவ்விடம் சுகமேயிருக்கிறேன்; உங்கள சுகத்தையும் நீங்கள் எழுதியனுப்பியஅன்பானகடிதத்தைக்கொண்டு அறிந்து மன ஆறுதலடைகிறேன்; எங்கள் மாமா, மாமி முதலியோருக்கும் என் சுகத்தைத் தெரிவியுங்கள்; என் மைத்துனரைப்பற்றி ஏதும் அறியலாமென்று இப்போதும என்னல் இயன்றவரை முயற்சிசெய்து வருகிறேன்: ஆனல் இற்றைவரையில் அவரைப்பற்றி ஏதும் அறிய முடியவில்லை; இது மாத்திரம் எனக்கு எந்த நேரமும் பெருங் கவலையாகவிருக்கின்றது; ஆனாலும், எப்படியும் ஆண்டவனருளால், எங்கள் அரிய மைத்துனரைப்பற்றி ஏதும் அறிவேன் என்ற நம்பிக்கை என்னுள்ளத்தை விட்டு அகலவில்லை: இதனையிட்டு நீங்களிருவீரும், எங்கள் அரிய மாமன் மாமியும் கவலைப்படவேண்டாம்; இதுவும் தெய்வத்தின் சோதனையிலொன்றேன்று எண்ணி மனம் ஆறுதலடைய வேண்டும். நிற்க,

என் அருமைத் தங்காய், நீரும் எங்கள் தாயாரும் என்னை நீடித்த காலம் பிரிந்திருப்பதையிட்டுக் கவலைப்படுவதையும் என்னைக் காண ஆவலோடிருப்பதையும்பற்றி எழுதியிருந்தீர்கள்; எனக்கும் உங்களை வெகு காலமாக வந்து காண வாய்க்கவில்லையே யென்பதையிட்டுப் பெருங் கவலை; காணப் பெரும் ஆசை; ஆனல் என்ன செய்யலாம்; தங்கைச்சி, நாம் பார்க்கும் இந்தச் சின்ன உத்தியோகத்தை இடையில் விட்டுவிட்டு உவ்விடம் வர மனந் துணியவில்லை; இதனைக் கைவிட்டால், மீண்டுவந்து இப்படியொரு சேவையைப் பெற்றுக் கொள்ள முடியுமோ என்பது சந்தேகம்; ஆனதால், தங்கைச்சி,

தொடர்ச்சி 5 ம் பக்கம்

விற்றிலாற் மண்ணுமோ பழந்தத்து சுமக்கவழியுள்ள ஏதும் புல் பூடுதானும் முளைக்கவொட்டாது செய்துவிட்டது; இப்படியான சங்காரகிருத்தியம் நடக்குங் காலத்திலே கொலை யதிகப்படுகிறது என்று முறையீடு செய்தலும், அதனை நீக்க முயலுதலும் ஒருவன் இருப்புத்துண்டையெடுத்து வாயிவிட்டுப் புத்தியீனமாக விழுங்கிவிட்டு, அது சீரணமாகும்படி சுக்கு (வேர்க்கொம்பு)த் துண்டிற் குடிநீர்அவித்துக் குடித்தவாருகும். அரசனெவ்வழி குடிகளுமவ்வழி யென்று தமிழில் ஒரு பழமொழியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞான போதம்

சென்ற அகில இலங்கைச் சைவமகாநாட்டில்
(19-4-47) திரு. சி. நாகையா அவர்கள் நிகழ்த்திய விரிவுரை

அன்பு அறிவு ஆற்றல்களிற் சிறந்த அவைத்தலைவரவர்களே! சகோதர சகோதரிகளாகிய சிவநேயச் செல்வர்களே! எனது அன்போடு கூடிய வணக்கத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். உங்கள் முன்னிலையில் ஒருசிறிது விரித்துரைக்க இங்கு எடுத்துக்கொண்ட விஷயம் சிவஞானபோத மென்னுந் தமிழ்த் திவ்விய நூலாகும். சிவஞானபோதம் ஓர் சிறந்தஅனுபவநூல்; ஒப்புயர்வற்றதெய்வ நூல்; வீட்டுநூல்; தேவார திருவாசகங்கள் எவ்வளவு சிறந்த தோத்திரங்களோ, இது அவ்வளவு சிறந்த சாஸ்திரநூல்.

இந்நூல் உத்தேசம் 750 வருடங்களுக்குமுன் திருவெண்ணெய் நல்லூரிலே ஸ்ரீ மெய்கண்டதேவராற் பொழிப்புரையுடன் கத்திய ரூபமாகச் செய்யப்பெற்றது. அதாவது கி பி 1200 க்கும் 1215 க்கும் இடையில் எழுந்த திருவருட் சுரப்பாகும். இதை 1 நூற்சிறப்பு, 2 நூலாசிரியரின் பெருமையும் தகைமையும், 3 நூல் நுதலிய பொருள், 4 நூல் ஞானவுலகத்திற் பெறுமிடம் 5 முடிபுரை என்று ஐந்தாகப்பிரித்துக்கூறவிரும்புகிறேன். கல்லானில், மலைவில்லாரநுளிய, பொல்லாரிணை மலரே எங்களுடன இருந்து நாம் பயன் பெறுமாறு துணைபுரியவேண்டு மென்று வந்தித்து வழுத்துவோமாக

2 (A) இந்நூலின் சிறப்புக்களோ பலப்பல. அவைகளிற் சிலவற்றை மாத்திரமிங்குக் கூற விரும்புகிறேன். இந்நூல்தான் உண்மைச் சமரசம் போதிக்கும் ஞானநூல். மறுசமயத்தவர் தத்தம் சமயமே உய்வுக்கு வழி, வேறு வழியில்லையென்று சாதிப்பதோடமையாது, பொன், பெண், உத்தியோகம் முதலியவைகளால் நஞ்சமயத்தவரை வசைத்துத் தம் மதத்திற கிழுப்பர். இந்நூலின் கொள்கையென்றுலா, நினைக்கக்கூடிய ஒவ்வொருவரையும் தாய்போற் பரிவுடன பார்த்து “அப்பா மகனே, நீ சொல்வது அமையும். ஆனல் உவைகட்கு மேற்படிகளுமுண்டு முயன்றுபார். கடவுளைப் பணிவுடன் வேண்டிக்கொள், சிரத்தைகொள்” என்று ஒரு சிறிது தத்துவ விசாரணையின் பாற்படுத்திக்காட்டி, மேற்படிகளையுங் காட்டித் தத்துவாதீதனுகிய விழுப்பொருள் எவறும் அந்நியமாயிருப்பதையுங் காட்டி அப்பால் அன்பால் இன்பமுமாரப்பண்ணி அதற்கு மப்பால் பாலவாறுந் தொழும்பாகும் அங்கு ஆண்டா னடிமைத்திறத்தையுங் கொழுத்திக் காட்டி அணிபெற விளக்குமிந்நூல்.

(B) இரண்டாவதாகரூபத்தில் மிகமிகச் சிறிதாயினும் பொருட்கோடவிற்சாலவும் பெரியது. இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களை மாத்திரமுடையது. 33 அதிகரணங்களையும் 41 அடிகளையும் 205 சொற்களையும் 700 வனாகொண்ட எழுத்துக்களையும் மாத்திரங் கொண்டது.

பொருட்கோடலிலோ எல்லையற்ற பரம்பொருளையும், அனந்தகோடி ஆன்மாக்களையும் அவைகளைச் சிவபிரானிடத்துச் செல்லவொட்டாது தடுத்து நிற்கும் அளவிறந்த சக்திகளையுடைய ஆணவமலத்தையும் தனுகரணபுவன போகங்களைத தந்து சிறிது உதவி செய்யும் மாயையென்ற செவிலித்தாயையும், நடுவுநிலையின் இலக்கியமாகிய துலாக்கோல்போலச் செம்மையுற்று அவரவர் வினையை யவரவர்க்கே கொடுத்து நன்மைப்படுத்திடும் பக்குவம்வந்தகாலை குருவாய் உருவெடுத்து வந்து உபதேசஞ் செய்து முத்தியையும் நல்கும் நற்றூபாகிய பராசத்தியைப் பற்றியும் சொல்லும், கடவுளோ ஆன்மாவோ உலகமோ ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கும்விசேடமாகிய அத்வைதத்தைப்பற்றியும். அதற்குமேற்செய்யவேண்டிய சாதனம் அதன் பயனுகிய முத்தியின் பத்தைப்பற்றியும் தெள்ளித் தெரித்துக் காட்டுந் திறமையுடையது இந்நூல்.

(C) மூன்றுவதாக, ஆதிசமய குரவராகிய தெட்ஷிணுமூர்த்தியுடன் சைவர்களாகிய எங்களைத் தொடர்வுபடுத்தி எங்களுக்கு ஓர்பெருமை அளித்து நிற்பது இந்நூல், இறைவாக்காகிய வேதசிவாகமங்கள் நான்கு படிகளையுடையன. அவைகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. அவைகளுள் ஞானமே உச்சப்படியிலுள்ளது. இப்படியிலுள்ள அறிவன் நூற்கருத்துக்களை யெல்லாம் தெட்ஷிணுமூர்த்தி வடிவந்தாங்கிக் கல்லாலின்புடை யிருந்து சின்முத்திரை ஒருகையிற் கொண்டு மற்றக்கையிற் சிவஞானபோதமுங் கொண்டு, சொல்லாமற்சொன்னுர். கேட்டார் கணத்தலைவரான நந்தியம்பெருமான். கேட்டமாத்திரையானே மலைவுதீரப் பெற்றுர். அவரிடமிருந்துதிருக்கைலாய பரம்பரைச் சந்தானவழியாக வந்து நாமெல்லோமும் உய்யும் பொருட்டுப் பெற்றுர் மெய்கண்டார். அவர் தமிழிற் சொல்லிவைத்தார் எனவே சிவபெருமானுரோடு எங்களைத் தொடர்வுபடுத்து முறுதியாகும் இந்நூல்.

நாலாவதாக, இதுவே தமிழிலுள்ள சித்தாந்த சாஸ்திரங்கட்கெல்லாம் தாய்நூல். திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் ஞாலமிர்தம் முதலிய சித்தாந்த நூல்கள் காலத்தால் முந்தியவையாயிருந்த போதிலும், பொருட்கோடலில் இதைப்போல முழுமையும் தகைமையு முடையனவல்ல ஆசிரியர் மெய்கண்டாரே இதற்குப் பொழிப்புரையுஞ் செய்திருக்கிறுர். சகலாகம பண்டிதரென்னுங் காரணப்பெயருடையவரும், ஆசிரியர் மெய்கண்டாருடைய குலகுருவும் உத்தம சீடருமாகிய அருணந்தி சிவாசாரியர் செய்த சிவஞான சித்தியாரென்ற விரிவானநூல் இதன் பெருவியாக்கியானமாகும்.

இந்த நூலைப் பின்வந்த எங்கள் தாயுமான சுவாமிகள், “பாதி விருத்தத்தாற் பார் விருத்தகமா வுண்மை சாதித்தார்” என்று விதந்தோதுவாராயினர். இன்னும் அறிவால், அருளால் மேம்பட்டவரும். பெற்றுன் சாம்பானுக்கு முத்தி கொடுத்தவருமாகிய உமாபதி சிவாசாரியராற்செய்யப்பெற்ற சிவப்பிரகாசமும் தெள்ளித் தெளித்துச் சொல்லுமோர் உரையாகும். இவையெல்லாம் கத்திய ரூபமாச் செய்யப்பெற்றன. வடகலை தென்கலையாகிய இரு கலைகளையும் நிலைகண்ட மாதவச் சிவஞான முனிவர் செய்த கல்விக் கழஞ்சியமாகிய சிவஞான பாடியமென்ற வசன நூலு முரையாகும். இவையெல்லாவற்றிற்கும் முதல் நூலாக நிலவுமிந்நூல் ஏனைய சித்தாந்த நூல்களுக்குத்தாய்நூல்.

இப்படிப்பட்ட பெருநூலை எப்படி நாம்படிப்பதென்று சிலர் பயப்படக்கூடும்; ஒவ்வொருவர் அனுபவத்துக் கெட்டிய காட்சிப் பொருள்களையும் அனுமானப் பொருள்களையுங் கொண்டு பொருள் நிச்சயஞ் செய்கிறுர் ஆசிரியர். உவமானங்கள் ஏதுக்கள் எடுத்துக் காட்டிக்கொண்டு பொருளைத் தெரிப்பது பொருளையறிய இலகுவாயிருக்கும். ஆகையினுல் தைரியத்தோடு நாமெல்லோமுங் கற்கலாம்.

---

இந்நூலாசிரியரின் தெய்வீகமும், தகைமையும் இந்நூல் சொல்லவேற்றனவோ என்று சிறிதாராய்வோம் ஆசிரியர் திருவள்ளுவர் உள்ளந்தான் திருக்குறளென்பர்; அதுபோல ஆசிரியர்மெய்கண்டாரின திருவுள்ளந்தான் சிவஞானபோதம். தாய் தந்தையர் முக்குள நீராடி, மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தரிசித்து அவர்கள் என்ன தவமியற்றினரோவென்று வியக்க வந்துதித்தவர் சுவேதவனப் பெருமாள். வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்க வந்துதித்த திருஞானசம்பந்தர் போலப் பிறப்பிலே சாம்சித்தராயுள்ளவர். சிவதீக்கையின் விசேடத்தால் இராமரும் கிருஷ்ணரும் கடவுளதிகாரம் பெற்றுர்களென்பது சரித்திரம். அதுபோல, திருக்கைலாய பரம்பரை அகச் சந்தானத்து நான்காம் குரவராகிய பரஞ்சோதி முனிவரால் உவந்து தீட்சைசெய்யப்பெற்று மெய்கண்டார் என்ற தீட்சா நாமமும் சூடப்பெற்ற தகைமையுடையார் ஆசியர். தேவாரங்கள் உலகத்தில் நிலவக் காரணராயிருந்த நம்பியாண்டார் நம்பி திருநாரையூர்ப் பிள்ளையாரிடம் பாடம் கேட்டதுபோல, திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் அனுமதியுடன் எங்களுக்கு மெய்கண்ட சாத்திரத்தை அனுக்கிரகம் பண்ணிய பெரியோராவர் ஆசிரியர். “பொய்கண்டார்காணுப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் பெறுநாளெந்நாளோ” என்று விதந்தோதப்பட்டவர். ...

சிவமேயென்பதும், இவர் செய்த நூல் சிவாகமந்தானென்பதும் திண்ணம்.

இந்நூல் நுவலும் பொருள் யாதோவென்று ஒரு சிறிது அவதானிப்போம் தூலமாகப் பார்க்கில் முதலாறு சூத்திரங்களாலும் முப்பொருளுண்மையையும் அவைகளின் பொதுவியல்புகளையும், பின் 6 சூத்திரங்களாலும் அவைகளின் சிறப்பியல்புகளையும் ஆன்மா செய்யவேண்டிய சாதனைகளையும் அதன் பயனுகப் பெறும் முத்தியிலக்கணத்தையுங் கூறும். சூக்குமமாகப் பார்க்கில் 1-ம் 2-ம் 3-ம் சூத்திரங்கள் முப்பொருள் உண்மையையும் 4-ம் 5-ம் 6-ம் சூத்திரங்கள் அவைகளின் பொதுத் தன்மைகளையும் 2-ம் 5-ம் 11-ம் சூத்திரம் இறைவன் தமது சித்தும் சத்துமாகிய தன்மையால் ஆன்மாக்களுடன் ஒன்றாயும் உடனுபும்வேறாயும் நின்று பெத்தம் முத்தியாகிய இரண்டு நிலைகளிலும் உபகரிக்கும் முறைகளையும் அவற்றின்தொகுதியாகிய அத்வைத சம்பந்தத்தைப்பற்றியும 7-ம் 8-ம் 9-ம் சூத்திரங்களிற் பாசமாகிய தளையை நீக்கிச் சிவப் பேறுபெற்று வீடடைவதற்கு ஆன்மாக்கள் செய்ய வேண்டிய சாதனங்களாகிய சரியையாதி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# ஹிந்துஸ்தானில் ஆத்திரம்

## 7 கோடி முஸ்லிம்கள் 30 கோடி ஹிந்துக்களை டக்குவதா?

### காஸ்மீரம் சேர்ந்துவிட்டது

இந்தியச் சமஸ்தானுதிபதிகளின் கண்கள் மெல்ல மெல்லவாகத் திறக்கின்றன. மிகப்பெரிய சமஸ்தானங்களில் ஒன்றுகிய காஸ்மீரம் அரசியல் நிர்மாணசபையிற் சேரத் தீர்மானித்துவிட்டது. இச்சமஸ்தானம் வடக்கேயுள்ளது. இங்கே முஸல்மான்களே 100க்கு 60 விகிதத்தினர்க்கு மேல் இருப்பினும் மகாராஜா ஹிந்து ஆவர். வடக்கெல்லைப் புறத்தில் இது இருப்பதால், ருஷயச் சமதர்மிகளின் செல்வாக்கு மெல்ல மெல்லவாக இங்கே பரவும் உற்பாதங்கள் தோன்றுகின்றன. இந்த நிலைமையில் இந்தியச்சமஷ்டியிற் சேராமல் காஸ்மீரம் தனித்து நிற்குமாயின் அதற்கு ஆபத்து நேரும் என்பது நிச்சயம். இதனை உணர்ந்த சமஸ்தானுதிபதி இந்தியச் சமஷ்டியிற் சேர முன்வந்தமை போற்றத்தக்கதாகும்.

### தான்றேன்றித் தர்பார்

தான்றேன்றித் தர்பார் நிகழ்த்தும் திருவாங்கூர், மைசூர், ஹைதராபாத் முதலாம் சமஸ்தானங் ளுக்கும் காஸ்மீரத்தின் செயல் தூக்கிவாரிப்போட்டுவிட்டது. இனியும் தாம் முட்டுக்கட்டைபோட முடியாது, தாம் சுதந்திரமாகச் சர்வாதிகார ஆட்சி நடாத்திப் பிரஜைகளை அடக்கியாள முடியாது என்று இச் சமஸ்தானங்கள் விழிக்கின்றன. இவற்றுள் ஹைதராபாத்தின் நிலை இன்று மிகவும் பரிதாபகரமானது என்ற கூறினும் பொருந்தும். ஹைதராபாத் 100க்கு 85 விகிதத்துக்கு மேல் ஹிந்துக்களைக் கொண்டது. ஆனல் ஓர் முஸ்லிம் மன்னர் அங்கே தாபார் நிகழ்த்துகிறுர். இவருடைய ஆதரவால் தான் ஜின்னு சாய்பு இவ்வளவுதூரம் கும்மாளம்போடவேண்டி யேற்பட்டது என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது. இப்போதும் நிஸாம் காலப்போக்கை உணர்ந்து அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்து அகண்ட ஹிந்துஸ்தானத்திற் பங்குபற்றுமலிருப்பாரேயானல், அவருடைய சமஸ்தானத்தின் எதிர்காலம் அவ்வளவு சிறந்ததாக விருக்கமாட்டாது என்பது நிச்சயம்.

### பாஞ்சால, வங்கப் பிரிவினை

பாகிஸ்தான் இயக்கம் பரவி வலுப்பெறப் பலலாண்டுகள் சென்றன ஆனல் வங்காளத்தையும், பாஞ்சாலத்தையும் பிரிவினை செய்யவேண்டும் என்ற கிளர்ச்சி சில நாட்களுக்கு முன்னரேயே தோன்றி, இப்போது அசைக்க முடியாத அளவுக்கு வலுப்பெற்றுவிட்டது பிரிவினை செய்தற்சுத்தக்க நியாயம் உண்டென்பதை இராஜப்பிரதிநிதியும் உணர்ந்துவிட்டார் என்று தெரிகிறது. ஓர் கையில் வாளும், ஒரு கையிற் குர்ஆனும் கொண்டுவந்து இந்தியாவில் கால்வைத்த மகமத்கோரி போன்றவர்கள் இன்னும் முஸல்மான்களில் இருக்கிறுர்கள்தான். எனவே பாஞ்சாலமும், வங்கமும் இன்னும் சில தினங்களிற் பிரிக்கப்படலாம். அப்படிப் பிரிக்கப்பட்டபின். லீக்கரும் ஜின்னு சாய்புவும் தம் பாகிஸ்தானை வைத்துக்கொண்டு அழட்டும் ஆனல் சிலகாலத்தின்பின் பிச்சை வேண்டாம் தாயே நாயைப்பிடி என்றவன் சிலமாக “இனிப் பாகிஸ்தான் வேண்டாம் நீங்களே பிடித்துக் கொள்ளுங்கள், நாங்கள் இந்திய சமஷ்டியிற் சேருகிறேம்” என்று இன்று ஜின்னு சாய்புவைத் தட்டிக்கொடுத்து, சும்மா கிடந்த மனுஷனுக்குக் “காயிதே ஆஸம்” பட்டமும் கொடுத்த அதே முஸல்மான்கள் கூறுவரேயானல் எவரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை.

### வங்கத்தில் அட்டூழியம்

வங்கத்தில் லீக் மந்திரசபை செய்யும் அட்டூழியங்களுக்குக் கணக்கில்லை. ஷுராவர்த்தியின் அரசாங்கத்துக்கு முஸ்லீம் குண்டர்களும் காடையருமே தூண்கள். ஹிந்துப் பெண்களை முஸ்லிம் பொலிசார் கற்பழிக்கிறுர்களாம். சிசுக்களை வதைக்கிறுர்களாம். வயசு வந்தவர்களைச் சித்திரவதை செய்கிறுர்களாம். அங்கே ஹிந்து சமுதாயம் கொதிக்கிறது. இந்த அட்டூழியங்களை எல்லாம் தக்க ஆதாரத்துடன் வங்கச் சட்டசபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தவர்கள் பண்டிதர் நேருவுக்கும், வல்லபாய் படேலுக்கும், இராஜப் பிரதிநிதிக்கும் எடுத்துக் கூறியிருக்கிறுர்கள். ஹிந்து சமுதாயத்தின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. கேவலம் 7 கோடி முஸல்மான்கள் — கல்வியறிவு நிரம்பவில்லாத மதவெறியர்—இவ்வளவு செய்வார்களேயானல், 30 கோடி மக்களைக்கொண்ட ஹிந்துசமுதாயம் பொங்கி எழக்கூடும். அப்படி எழுமானல், பீகாரில் அன்று நிகழ்ந்த சம்பவம் மற்றும் மாகாணங்களிலும் நிகழக்கூடும் என்பதை இராஜப்பிரதிநிதி உணராமலில்லை. எனவே இந்த நிலைமையில் வங்காளத்தை உடனே பிரித்து மேற்குப் பகுதியை ஹிந்துக்களிடம் கொடுக்க அவர் கூடிய சீக்கிரம் நடைவடிக்கை எடுப்பார் என்று செய்திகளால் யூகிக்கக்கிடக்கின்றது.

### மவுண்ட்பேற்றன் - ஜின்னு சந்திப்பு

சென்ற புதன்கிழமை மிஸ்ரர் ஜின்னு மீண்டும் இராஜப்பிரதிநிதியைக் கண்டு சம்பாஷித்தார்; அவருக்குப்பின், அகில இந்திய ஹிந்து மகாசபைத் தலைவரான டக்ரர் ஷியாம் பிரஸாத் முக்கர்ஜியும், கல்கத்தாவின் பிரபல காங்கிரஸ் வாதியுமான டக்ரர் பிலன் சந்திராயும் இராஜப்பிரதிநிதியைக் கண்டு சம்பாஷித்தார்கள். வங்கப் பிரிவினை விஷயமாகவே இவ்விருவரதும் அபிப்பிராயத்தை இராஜப்பிரதிநிதி அறிந்திருக்கிறுர்என்றுயூகிக்கப்படுகிறது. வங்காளச் சட்டசபையை, காங்கிரஸ் பிரதிநிதிகள் பகிஷ்கரித்திருப்பதும் இச்சம்பாஷணையின்போது பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

### பர்மாவிலும் பாகிஸ்தான்?

பர்மாவின் அரக்கன்பகுதியில் உள்ள முஸ்லீம்கள், தங்களைப் பர்மாவிலிருந்தும் பிரித்து, வங்காளத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும், அல்லது, அங்கே ஓர் பாகிஸ்தானம் அமைக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறுர்கள், சிலகாலத்துக்குமுன் இந்தப் பிரச்சினை வெளிவந்தபோது, “அப்படி ஓர் கிளர்ச்சியுமில்லை, பர்மாவில் உள்ள முஸ்லீம்கள் பர்மா அரசாங்கத்துடன் ஒத்துழைத்து பர்மாவிலேயே” இருப்பர் என்றெல்லாம்ஜின்னுசாய்பு கூறினர். இப்போது அரக்கன் முஸலிம்களின் கிளர்ச்சிக்கு என்ன கூறப்போகிறுர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானபோதம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

நான்காகிய பாதங்களையும் ஆணவ வலி கெடுவதற்குச் சிவோக[illegible]பாவனை செய்தலும், தாம் பெற்ற சிவ[illegible] வழுவாது நிலைப்பதற்குப் பஞ்சாட[illegible]ானத்தையும் சொல்லும். 10-ம் 11-ம் 12-ம் சூத்திரங்களில் இந்தவுடம்புடனே முத்தியடைவதாகிய சீவன்முத்தர் அவர்க்குச் செய்யும் சாதனங்களாகிய ஏகனுகி, இறைபணி நிற்றல், அயரா அன்பு செலுத்துதலாகிய மூன்றினையுஞ் சொல்லியும் அதன்பின் பெற்றபடியே வழுவாது நிற்றலுக்குச் செய்யவேண்டிய செம்மலர் நோன்றாள் சேரவொட்டா அம்மலங்கழீ. அன்பரொடு மரீ, மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனக் கண்டு, வழிபடுதலாகிய நாலையும் சொல்லும். எனவே சுருக்கிச் சொல்லுகில் முப்பொருளுண்மையையும் அவைகளி னியல்புகளையும், அத்வித இலட்சணத்தையும், முத்திபெற நாம் செய்யவேண்டிய சாதனையையும், அச்சாதனையின் பயனாகிய முத்திஇலக்கணத்தை அணைந்தோர் தன்மையாலும் 4 பொருளையும் சொல்லும்.

இப்பொழுது அணைந்தோர் தன்மை அடியார் பெருமையென்ற விஷயத்தினால் இன்று பின்னேரமும் அத்துவித இலட்சணம் அதே விஷயத்தால் நாளையிற்றினமும் கேட்பீர்கள். சாதனையென்ற விஷயத்தை நேற்றே தசகாரிய விளக்கத்திற் கேட்டீர்கள். ஆகையால் எஞ்சிய இப்பொருள்களைப்பற்றி மாத்திரம் நாம் கூறவேண்டிய கடப்பாடுடையேன். சைவசித்தாந்தம் சமாச சமயத் தொகுதியில் உச்சித் தானத்தை மிக அழகாக வகுக்கிறது. அதுவோர் அனுபவ சமயம் என்று முன்னரே கூறியுள்ளேன். அந்த அனுபவத்தை அத்வைத சம்பந்தத்திற்றான் அஸ்திபாரம் போடுகிறது அதனுடைய உண்மையான விளக்கம் உண்மைச் சாதனைக்குப் பெரும் பயனளிக்கும். மலைவு தீர்த்தது அத்வைதமாகையால சைவசித்தாந்த மார்க்கத்திற்கு அத்வைத விளக்கமே உயிர்.

"ஆணவத்தோடு அத்விதமானபடி
மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்விதமாகு நாளெந்
நளோ"

என்று பிரலாபிக்கிறார் தாயுமானவர் நாங்கள் பெத்தநிலையில் உலகத்தோடு அத்விதமாயிருக்கின்றோம் முத்திநிலையில மெஞ்ஞானத்தாணுவினோடு அத்விதமாகின்றமை தயறிவோம். அத்வைதவுணர்ச்சி சாதனைக்குப் பயன்படுவதுபோல, அத்வைத விளக்கத்திற்கும் பொருள் மூன்றென்றே கொள்ளவேண்டும். அவைகளின் தன்மைகளும் நன்றாக விளங்கவேண்டும். இதை விளங்குவதற்குச் சிறந்த இலக்கியமாயுள்ளவர்கள் மெய்யடியார்கள். அவர்கள் வாழ்வே அத்வைதவிளக்கத்தாலுண்டான சாதனை. அவைகள் திருப்பாடல்களுமே அதை விளக்குவன. ஆகையாற்றான் மெய்யடியாரைச் சிவமென்பர்.

கடைசியாக, ஞானவுலகத்து இந்நூல் பெறுமிடத்தைச் சிறிது பார்ப்போம். எங்களுக்கு இரண்டு கண்களாயுள்ளன வடமொழியும் தென்தமிழும். வடமொழியில் வேதங்கள் மிகப்பழையன. தென்தமிழில்தொல்காப்பியமுமப்படியே. வேத வழிபாட்டைக் கைக்கொண்ட மக்கள் வேள்வியாலும் உயிர்ப்பலியாலும் இகபாவின்பங்களைப் பெறலாமென எண்ணினர். இச்செயலைத் தடுக்க வந்தார் புத்த பகவான், அவர் அகிம்சா தர்மத்தையும் சீலங்களையும் வற்புறுத்தினர் கடவுளைப்பற்றிப் பேசுவது அவர்காலத்திற் றேவையாயில்லை. நாஸ்திகம் எழுநா விட்டெரிந்தது]. வேதங்களின் உச்சிப் பொருளைச் சேர்த்து வேதாந்த சூத்திரங்களைச் செய்தார் வியாசர் பெருமான். மன்பதை அவைகளின் பொருளைக் காணாது தவித்தன. அதனை விளக்கப் பெரும்பாஷியங்க ளெழுந்தன இவைகளுள் சிறீ சங்காராச்சாரியார் பாஷியமே கடவு ளில்லை யென்பாரைத் திருத்த வெண்ணி எல்லாம் கடவுள். அவனன்றியோர் அணுவுமசையாதென்ற பெருவுண்மைகளை அவர் வற்புறுத்தினர். கடவுளைவிட வேறில்லையென்று அவர் வற்புறுத்தினர் என்று பிழையாகக் கொண்டது மன்பதை; இதுதான் ஏகான்மவாதம், அல்லது பிரமவாதம் வேதாந்தத்தின் முடிந்த பொருளைப் பகவான் கீதையில் அர்ச்-

# நீதியரசர் பிரிவு

## யாழ்ப்பாண நீதிஸ்தலத்திற்குறிப்பு

காலஞ்சென்ற நீதியரசர் என். நடராசா கே. வி. அவர்களின் அகாலமரணம்சம்பந்தமாகசென்றதிங்கட்கிழமை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்நீதிபதிஸ்ரீ R. R. செல்வத்துரை அவர்கள் நீதாசனம் வந்து அமர்ந்ததும், முடிக்குரிய நியாயவாதி ஸ்ரீ த. முத்துச் சுவாமிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். ஸ்ரீ நடராஜாவின்பிரிவு பொதுவாக இலங்கைக்கும் சிறப்பாகத் தமிழ்ச் சமூகத்துக்கும் ஓர் பெரிய நட்டத்தை விளைத்திருக்கிறது என்று ஸ்ரீ முத்துச் சுவாமிப்பிள்ளை கூறி மேலும் பின் வருமாறு குறிப்பிட்டார்:

ஸ்ரீ நடராஜா ஓர் பெரிய சட்ட வல்லுநர்; ஆழ்ந்த அறிவாளி; சிறந்த சமயபத்தர்; நிறைந்த பாஷாபிமானி; அவர் தமது ஜென்மவூராகிய காரைநகர்க்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பில; நீர்கொழும்பு விவேகானந்த சபையின் தலைவராகவிருந்து மகத்தான சேவையாற்றினர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபையிலும் அவர் ஓர் அங்கத்தவராகவிருந்து சைவத்துக்கும் நம் நாட்டுக்கும் சிறந்த தொண்டுபுரிந்தார், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் ஜனத்தலைவர்களுக்கெல்லாம் ஸ்ரீ நடராசா விருந்தோம்பி யுபசரித்துவந்தார். இத்தகைய அவர் மகத்தான பதவியாம் உயர்தர நீதிமன்றத்து நீதியரசராக வந்து சில நாட்களுக்கிடையில் அகால மரணமடைந்தமை இந்நாட்டுக்கும், தமிழ்ச் சாகியத்தார்க்கும் நியாயவாதச் சமூகத்தினர்க்கும்மகத்தான நட்டமாகும்.

யாழ்ப்பாணம் நியாயவாதிகள் சார்பாக ஓர் அநுதாபச் செய்தியைக் காலம்சென்றவரின் மனைவியார்க்கு அனுப்பவேண்டும் என்று ஸ்ரீ முத்துச்சுவாமிப்பிள்ளை நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

டிஸ்திறிக் நீதிபதி ஸ்ரீ செல்வத்துரையவர்கள் தாமும் ஸ்ரீ நடராசாவும் பள்ளிக்கூட நண்பர்கள் என்றும், ஸ்ரீமுத்துசுவாமிப்பிள்ளை கூறியவை அனைத்தையும் தாம் ஆமோதிப்பதாகவும் கூறி, இவ்வநுதாபச் செய்தியை இறந்த ஸ்ரீ நடராஜாவின் மனைவியார்க்கு அனுப்புமாறு பணித்தார்.

ஸ்ரீ செல்வத்துரையுடன் கூட்டு டிஸ்திறிக் நீதிபதி மிஸ்ரர் டீ சில்வாவும் நீதாசனத்தில் இருந்தனர்.

யாழ்ப்பாணத்து நியாயவாதிகள் அனைவரும் அன்றைத் தினம் நீதிஸ்தலத்திற் சமூகமாயிருந்தனர்.

---

சுனற்கு உபதேசஞ் செய்கிறார். கீதை ஒரு ஞானயோகநூல்; அது போதிப்பது நிஷ்காமகர்மயோகத்தை; இப்படி வடகலைகளிருப்ப, தொல்காப்பியம் ஓர் இலக்கணநூல்; அது கடவுள் வாழ்வோடு கண்ணியம் வரக்கூடிய பொருள்கள் மூன்றாகந்தளி வள்ளி கொடிநிலை யென்கிறார். இதற்கிலக்கியமா யிருப்பதுபோல விருப்பது திருக்குறள். ஆங்கு கடவுள் வாழ்த்துடன் வான்சிறப்பு நீத்தார் பெருமை அறன்வலியுறுத்துதலையுங் காண்கிறோம் இந்தப் பெருநூலும் அறம், பொருள், இன்பமாகிய மூன்றையுஞ் சொல்லி 4-ம் பொருளாகிய வீட்டை உய்த்துணர வைக்கிறது. மேலும் தென்தமிழுக்குச் சிறப்பு அகப்பொருள் ஆங்கும் இறையனாரகப்பொருளும் களவியலுரை திருச்சிற்றம்பலக்கோவையார் முதலிய இலக்கியங்கள் சிற்றின்பம் மூலமாகப் பேரின்பத்தைக் காட்ட முயலுகின்றனவே யன்றி நேரேபிதுதா னென்று சொல்லவில்லை. ஏனைய சங்கவிலக்கியங்களும் பெருங்காப்பியங்களுமிப்படியே. எனவே இரு கலைகளும் வீட்டுநெறியை உய்த்துணர வைத்தன. நேரே சொல்லமுடியாது வருந்தின. சிவாகமச் சார்பாய் வந்த இந்நூல் அதைச்சொல்லியது. அதற்கு வாய்ப்பாயிருந்தது. சைவ மெய்யடியார் வாழ்க்கையும் திருப்பாடல்களுமே

வேதம்பசு அதன்பால் மெய்யாகமம்
[நால்வர்
ஓதும் தமிழ்அதனி னுள்ளுறுநெய்—
[illegible]
செய்யி னுறு[illegible]

# சைவபரிபாலனசபை ஆச்சிரம நிதி

## பணம் உதவியோர் விபரம்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஸ்ரீமான்கள் | முன் கணக்குப்படி | 1635 | 00 |
| | G. G. பொன்னம்பலம் (5-ம் பகுதி) | 100 | 00 |
| | S. T. முத்துலிங்கம் (திருநெல்வேலி) | 25 | 00 |
| | S. சிவசுப்பிரமணியம் (கொழும்பு) | 50 | 00 |
| | K. சின்னத்துரை (சீராவியடி) | 10 | 00 |
| | M. பரராஜசிங்கம் | 75 | 00 |
| | K. K. கந்தையா (கந்தர்மடம்) | 10 | 00 |
| | P. கந்தையா (காரைநகர்) | 5 | 00 |
| | V. அருணாசலம்பிள்ளை (வண்ணார்பண்ணை) | 25 | 00 |
| | K. A. கனகசபை ,, ,, | 20 | 00 |
| | V. M. K. சோமசுந்தரம் ,, ,, | 20 | 00 |
| | S. R செல்வத்துரை ,, ,, | 10 | 00 |
| | S. S. ஆறுமுகம்பிள்ளை ,, ,, | 5 | 00 |
| | K. இராம்ரெத்தினம் செட்டியார் ,, | 5 | 00 |
| | A. சிவகுருநாதன் (கோலாலம்பூர்) | 15 | 00 |
| | A. இலங்கையர் (சிங்கப்பூர்) | 6 | 50 |
| | S. பொன்னம்பலம் ,, | 1 | 00 |
| | V. கந்தையா ,, | 3 | 00 |
| | K வெற்றிவேலு ,, | 1 | 00 |
| | T. சதாசிவம் ,, | 1 | 00 |
| | N. வைத்தியலிங்கம் ,, | 1 | 00 |
| | M. அப்பாபிள்ளை ,, | 2 | 00 |
| | S. சண்முகம் ,, | 1 | 00 |
| | S. A. ஐயர் ,, | 1 | 00 |
| | N. R. இராசா ,, | 1 | 00 |
| | C. இரங்கபாஷ்யம் ,, | 1 | 00 |
| | S. சின்னையா ,, | 2 | 00 |
| | V. சின்னத்தம்பி ,, | 2 | 00 |
| | K. V. முருகேசபிள்ளை ,, | 5 | 00 |
| | V. நடராஜா ,, | 15 | 00 |
| | | 2053 | 50 |

17-2.47

தி. இராசநாயகம்
தனாதிகாரி

---

[ணைய் மெய்கண்டான் செய்ததமிழ் நூலின் திறம்.

ஆகையினால் அவற்றைப்பற்றிச் சிலவற்றைமாத்திரங் கூறுகின்றேன். ஆசிரியர் காட்சிப் பொருள்களைக்கொண்டு காணக்கூடாத கடவுள் ஆன்மா முதலியவற்றை நிச்சயஞ் செய்வது எங்களறிவுக் கெட்டியதும் திருப்தியுமாயிருக்கு மென்று சொன்னேன். உதாரணமாக் குடத்தைக் கண்டவழி குயவனுண்டென்று நாம அனுமானிப்பதுபோலத் தோன்றி நின்றழியும் இவ்வுலகத்தை நாம் காணுகின்றோம். ஆகையினால் இது செய்வோனாகிய கடவுளையுடைத் திவ்வுலகம். இப்படியே ஆன்மா பிறந்து இறந்து வருகிறதைக் காணுகிறோம். இது ஆணவமலத்தாலென்றும், எனது உடலென்பதினால் இந்த வுடலைவிட்டு உள்ளே ஒரு உயிர் உண்டென்றும் ஆசிரியர் முப்பொருளுண்மை சாதித்தல் தக்கவாறும். இன்னொருவிதமாகப் பார்க்கில் முத்தியடைவதே மக்கள் வாழ்க்கையி னிலக்கென்போம். முத்தியென்றாலும் விடுதலையென்றாலும் ஒரு பொருட்சொற்கள் ஆகையால் விடுதலையடைவதற்குமுன் ஒருவர்கட்டுப்பட்டிருக்க வேண்டும். ஆகையால் கட்டுப்பட ஒருவரும் கட்டுவதாகி பாசம் அல்லது தளையும் விடுவிப்போனாகிய மூன்று பொருள் தேவையாய் முடியும்.

### முடிபுரை

இதுகாறும் கூறியவற்றால் சைவசமயத்தவரெவரும் இந்நூலைப் படிக்கவேண்டுமென்று விண்ணப்பித்தேன். அப்படி உங்களைக் கேட்குமுகத்தால் (1) இந்நூல் உண்மைச் சமாச நூல் என்றும் ரூபத்திற் சிறியதாயினும் பொருட் கோடலில் மிக மிகப் பெரியதென்றும் எங்கள் ஆதிகுரவராகிய தெட்சணாமூர்த்தியுடன் தொடர்வுட்படுத்தும் உறுதி இந் நூலென்றும் சைவசித்தாந்த மாக்கமாகிய மிகப்பாந்த மார்க்கத்திற்குத் தமிழிலுள்ள தாய்நூலிதுவென்றும், அப்படியாயினும் படிப்பதற்கு இலகுவாகப் போதனை செய்யப்பட்டிருக்கிறதென்றும் (2) இந்நூலாசிரியராகிய மெய்கண்டார் அத்வித சம்பந்தத்தை உண்மையாய் விளங்கப்படுத்தும் தகைமை யுடையவரென்றும், (3) முப்பொருள் உண்மையும் அதைவற்றொலொழி[illegible] சிவனுமல்ல, அச[illegible]லைச் சதசத்தென்னுஞ்

# உணவுப்பொருள் நிலை

வருகிற மேமாத மத்தியில் 20000 தொன் அரிசி பர்மாவில் இருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைவிட, இன்னும் சில தினங்களில் இங்கிலாந்திலிருந்தும் மோறிஷியஸிலிருந்தும் பெருந்தொகையான சீனியும் இறக்குமதி செய்யப்படும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்னும் நாடுகளிலிருந்து அடுத்த வாரம்மா இறக்குமதியாகும்.

# மீண்டும் சந்திப்பு

இம்மாதம் முடிவதற்கிடையில் மகாத்மாகாந்தி டெல்கிக்கு மீண்டும் இராஜப்பிரதிநிதியைச்சந்தித்து அரசியல் வியவகாரம் சம்பந்தமாகச் சம்பாஷிப்பார் என்றும், அடுத்த சில தினங்களில் இந்தியாவின் எதிர்கால அரசியல்சம்பந்தமான ஏதும் அறிக்கை விடப்படலாம் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.


# விற்பனவு விளம்பரம்

கந்தர்மடம் பலாலி ரோட்டில் 18 பரப்புக் கொண்ட கல்வீடு வளவு விற்பனைக்கிருக்கிறது. விரும்பினோர் கந்தர்மடம் பழம்ரோட் சி. சதாசிவம்பிள்ளை (ஆசிரியர்)யோடு நேரிற்பேசி ஒழுங்கு செய்க.

M 14 25 — 29


சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடைய பொருளென்று கொண்டாலொழிய அத்வைத சம்பந்தத்தின் உண்மை விளங்காதென்றும், அப்படி விளங்கும் சம்பந்தம் ஒன்றாகாமல், இரண்டாகாமல் ஒன்றுமிரண்டாகாமல் இருப்பதென்றும், இந்த விளக்கத்திலிருந்தே பாசமொருவிச் சிவப்பேறு பெறவேண்டுமென்றும் பெற்றாலும் அயரா அன்பினாலும், சிவனடியார்சேவையாலும், ஆலய வழிபாட்டாலுமே அந்நிலை நிலைபெறுமென்றும், வடகலை தென்கலைகளாற் திரட்டப்பட்ட செம்பொருளை இந்நூல்தான் தமிழிற் சொல்லிற்று என்றும்ஒருவாறு திருவருளை முன்னிட்டுச் சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

எனக்கோரு உபாயம் புலப்படுகிறது; எங்கள் சேர்ந்தவூரிலிருந்து இந்தவூருக்கும், இந்தவூரிலிருந்து எங்களூருக்குமிடையேயிப்பொழுது யுத்தகாலத்திற்கு முந்தி நடந்தவிதமான கப்பற் போக்குவரவு நடக்கின்றன: உங்குள்ள மனைவி மக்களை இங்கே உத்தியோகம் பார்க்கும் நம்மவர்கள் அழைத்திருக்கிறார்கள். இந்த நாட்டில் இப்பொழுது வாழ்ந்தற்த அச்சமில்லை; ஆனதால் ஒருமுறை இங்கேவந்துபோக வேண்டுமென்ற விருப்பம் உங்களிருவரிடத்திலு மிருப்பின், எங்கள் மாமன் மாமியுடைய பூரண சம்மதத்தையும் பெற்றுக்கொண்டு தக்க துணையோடு நீரும் எங்கள் தாயாரும் உவ்விடமிருந்து புறப்பட்டு வரலாகும்; மாமா உவ்விடம் எங்கள் வீடுவளவுகளையும் பார்த்துக் கொள்ளுவாரென்று நினைக்கிறேன்; எதற்கும் உங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள்; இவைகளையெல்லாம் உத்தேசித்து இப்பொழுது ரூபா 200 பெறுமதியான 'மணியோடர்" எடுத்தனவத் தனுப்பியிருக்கிறேன்; பெற்றுக்கொள்ளவும்; இன்னும் என்னால் ஆகவேண்டியவைகளுக்கு உடனே தெரிவிக்கவும்; வேறு விசேஷமில்லை; ஆண்டவன் உங்களைக் காப்பாராக.

இங்ஙனம்
உனது அன்பான அண்ணன்
**சி. சிவகுருநாதன்**

### "நீங்கள் கவலைப்படவேண்டாம்"

மகனுடைய கடிதத்தை மகள் வாசிக்கும்போது மிக்க ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்த தாய் 'மகளே, உன் அண்ணன் எழுதியிருக்கிறபடி, ஒருமுறை மலாய்நாட்டிற்குப் போய் வருவது உனக்கும் விருப்பந்தானே" என்று கேட்க, 'நீங்களும் உடன் வருவதானால், மாமாவும உத்தரவு தருவதானால் எனக்கு நூறுமுறையும் சம்மதம் அம்மா" என்றாள் சிவபாக்கியம்; எனக்குச் சம்மதந்தான், மகளே, ஆனால் உங்கள் மாமனுடைய சம்மதத்தையும் பெற்றல்லவோ நாங்கள் அப்படிப் புறப்பட நினைக்கவேண்டும்" என்றாள் கண்ணகியம்மை 'மாமா இன்றைக்கு நாளைக்கு இந்தப்பக்கம் வரமாட்டாரா? அம்மா" என்று மகள் தாயைக் கேட்க "இன்று பொழுதுபடும் வேளையில் அவர் வருவாரென்றெண்ணுகிறேன்; தவறினால் நாளைக்காலை நானே அங்கே போய் அவருக்கு இந்த விஷயத்தைச் சொல்லி அவருடைய சம்மதத்தையும் அறிந்தபின், உன் அண்ணுக்குப் பதில் எழுதுவதுதான் நல்லது" என்றாள் தாய்; அன்று மாலைவேளை விநாயகமூர்த்தி தம் தங்கையின் வீட்டிற்கு வந்தார்; வந்தபோது தாயும் மகளும் அவரை உபசரித்தனர். பின் தாய் மகளைப் பார்த்து,' உன் அண்ணு எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டுவந்து உங்கள் மாமாவின் முன்னிலையில் வாசித்துக்காட்டு" என்று சொல்லுதலும், மகள் அப்படியே அக்கடிதத்தைப் போய் எடுத்துக்கொண்டுவந்து தன் மாமனுருக்கு முன்பு நின்று படித்தாள்; விநாயகமூர்த்தி கேட்டுச் சிறிது நேரம் யோசித்துவிட்டு, தம் சகோதரியைப் பார்த்து "தங்கைச்சி, எங்கள் மருமகன் இங்கு வருவதற்குத் தான் பார்க்கும் உத்தியோகம் தடையாகவிருக்கிறது என்று எழுதியிருப்பதால், நீங்களிருவரும் ஒருமுறை அந்த நாட்டிற்குப் போய்ச் சிலகாலந் தங்கியிருந்து பின்பு இங்கே வருவதனால் ஒரு பிழையுமில்லை என்று நினைக்கிறேன்; ஆனால் என் மருமகளையுங் கூட்டிக்கொண்டு உற்ற துணையில்லாமல் எப்படிப்போகலாம்; அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றார்: தக்கதுணை கிடைத்தாற்றான் போகலாம், இல்லாவிட்டால் நான் தனித்தவள் குமர்ப்பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு வெகுதூரத்திலுள்ள தேசத்திற்குக் கடல்கடந்து போவதெப்படி" என்று கவலையுடன் சொன்னாள் கண்ணகியம்மாள். "ஏன், அம்மா, எங்கள் மாமா எங்களுடன் துணையாக வந்து, சிலநாள் அங்கே தங்கி மீண்டும் எங்களுடன் வரவாய்க்காதோ" என்று தாயைக் கேட்க, தம்மருமகள் தம்முடன் படர்க்கையிற் பேசுகிறாளென்பதையுணர்ந்த விநாயகமூர்த்தி "வரலாமடியம்மா, ஆனால், நானும் உங்களுடன் புறப்பட்டால் என் வீட்டுக் கருமங்களையும் உங்கள் வீடு வாசல் பொருள்பண்டம் நிலம்புலம் என்னுமிவைகளையும் இங்கே பார்த்துப் பராபரிப்பதார் என்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்; நீங்கள் கவலைப்படவேண்டாம்: யாழ்ப்பாணப்பட்டினத்திலே "நாதன்" என்றொருவர் இருக்கிறார்; அவர் சிங்கப்பூர் மலாய் நாட்டிற்கு இங்கிருந்து போய்வரும் கப்பற் பிரயாணிகளுக்கு ஆகவேண்டிய சௌகரியங்களையெல்லாஞ் செய்துவைக்கும் கப்பல் ஏசண்டாயிருக்கிறார்; அவர் சிலவேளை கப்பற் பிரயாணிகளுக்குத் துணையாகத் தாமும் போய் வருவதை நான் அறிவேன்: நாளைக்குப் பட்டினப்பக்கம்போக உத்தேசித்திருக்கிறேன்; போகும்போது அவரையுங்கண்டு இந்த விஷயமாகப் பேசி, மலாய்நாட்டிற்கு இங்கிருந்து கப்பல் எப்போது புறப்படுகிறதென்பதையும் உங்களுக்குத் துணையாக வரக்கூடிய பிரயாணிகள் யாரும் புறப்படுகிறார்களோவென்பதையும் அவரிடம் அறிந்துகொண்டு வருகின்றேன்; நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம்" என்று சொல்ல, வேறு விஷயங்களையிட்டும்பேசி விட்டு விநாயகமூர்த்தி தம்முடைய சகோதரி, மருமகளென்னு மிவர்களிடத்தும் விடை பெற்றுக்கொண்டு மீண்டார். அடுத்தநாள் பொழுது பட்டபின் விநாயகமூர்த்தி தம் சகோதரி வீட்டிற்கு வந்து, தாம் பட்டினத்திற்குப் போனபோது குறித்த நாதன்என்பவரைச்சந்தித்ததாகவும்குறித்தவிஷயங்களைப்பற்றிப் பேசியபோது, அடுத்த மாசம் கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குக் கப்பலொன்று புறப்படுமெனவும், இங்குள்ள பெரிய குடும்பங்களிலுள்ள பெண்கள் சிலர் அந்தக் கப்பல்மூலம் புறப்பட்டுச் சிங்கப்பூருக்குப்போக நிச்சயித்திருப்பதாகவும், பெண்களாக ஆண்களாக சகல வசதிகளோடும் மரியாதையோடும் கப்பற் பிரயாணம் செய்தற்காகிய வற்பாடுகளையெல்லாம் தாம் செய்து வைக்கச் சித்தமாயிருப்பதாகவும் நாதன் என்பவர் தமக்குத் தெரிவித்தாரென்றும் விநாயகமூர்த்தி தம் சகோதரிக்கும் மருமகளுக்குஞ் சொல்லி பிரயாணத்திற் காகவேண்டிய ஆயத்தங்களையுஞ் செய்யும்படி தெரிவித்து அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டு போயினர்; சில தினங்கள் செல்ல, கண்ணகியம்மையும் மகளும் மலாய் நாட்டிற்குப்புறப்படுகின்றார்களென்ற செய்தி அயலட்டத்திலுள்ளார்க்குத் தெரிந்தது; அவர்களுடன் நட்பான அயலார் சுற்றத்தார் அவர்கள் வீட்டிற்குப் போய், பிரயாண விஷயம் நிசந்தானோ என்று தாயையும் மகளையும் கேட்க, அவர்களும் உண்மையைச் சொன்னார்கள்; சிவபாக்கியம் தாங்கள் ஒருகிழமை செல்ல, தங்களூரிலிருந்து புறப்பட்டு மலாய்நாட்டிற்கு வர உத்தேசித்திருப்பதைத் தனது தமயனுக்குக் கடிதமூலமாக எழுதியனுப்பினாள்; கண்ணகியம்மையும் பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்வாளாயினாள்.

### தேவை

இவை இங்ஙனமாக, அந்தப் புரோகிதர் ஒருநாட் காலை, கண்ணகியம்மையின் வீட்டிற்குப் போன போது கண்ணகியம்மையும் மகளும் அவரை உபசரித்திருத்தி, தாங்களிருவரும் விரைவில் மலாய் நாட்டிற்குப் போதற்கு உத்தேசித்திருப்பதைப் புரோகிதருக்குச் சொல்லி, அப்படிப் போகவேண்டியதற்காகிய எது என்னவென்பதையும் தெரிவித்தார்கள்; இவைகளையெல்லாங் கேட்ட புரோகிதர் "அப்படியானால், நீங்கள் ஒருமுறை அங்கே போய் வருவதுதான் நல்லது, சிந்தாயாத்திரையாகப் போய்வாருங்கள்" என்று ஆசிகூறி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தம் வீடு நோக்கிப் போவாராயினர்; அப்படிப் போனவர் தெருவீதியிலுள்ள கடையில் ஒரு தினசரிப் பத்திரிகையை விலைகொடுத்து வாங்கி விரித்துப் படித்துக்கொண்டு அப்பால் மெல்ல நடந்து போகும்போது, "தேவை" என்ற தலையங்கத்தோடு கூடிய ஒரு விளம்பரத்தை அந்தப் பத்திரிகையிற் கண்டு அதனைப் படித்துப் பார்த்தார். அதில் மலாய்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் ஒரு பட்டினத்திலேயிருக்கும் பெண் வித்தியாசாலைக்குத் தமிழ் உபாத்திமைப்பரீட்சையிற் சித்திபெற்ற இல்லையேல் உபாத்திமைத் தாராதரப் பத்திரம் பெற்ற ஒரு தலைமை யாசிரியை தேவை, வேதனம் தகைமைக்குத் தக்கபடி கொடுக்கப்படும்; வித்தியாசாலைக்கணித்தாகிய வீட்டிலேயே வசித்தற்காகிய வசதிகளெல்லாஞ் செய்யப்படும்; விண்ணப்பஞ் செய்பவர் யாழ்ப்பாணத்துப் பெண்ணாயிருப்பின், விசேஷ சன்மானம் வழங்கப்படும்; ஆகவேண்டிய விபரங்களுக்கு மேற்படி வித்தியாசாலை மனேஜராகிய இன்னாருக்குத்தெரிவிக்கவும் என்ற கருத்துப்பட அந்த விளம்பரம் காணப்பட்டது; அதனைப் படித்த மாத்திரத்தே ஐயருடைய உள்ளத்தில் ஒரு எண்ணம் பிறந்தது; 'நாம் இந்தச் சமாசாரத்தை அந்தச் சிவகாமியம்மைக்குத் தெரிவித்தால், பொருள் விஷயமாகக் கஷ்டப்படும் அந்த மனுஷி தங்கள் மகளையுங் கூட்டிக்கொண்டு மலாய்நாட்டிற்குப் போய் குறித்த வித்தியாசாலையிலே தங்கள் மகளைத் தலைமை யாசிரியையாகக் கடமை பார்க்கும்படி ஆக்குவிக்க இயலும்; அந்த ஊரிலே நம யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பெருமக்கள்தாம் எத்தனையோபேர் இருக்கிறார்களே. இப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் தங்களால் ஆகவேண்டிய உதவிகளையெல்லாம் செய்தல் அவர்களுடைய கொள்கையாகும்" என்று யோசித்தபடி, தம் வீட்டிற்குப் போகாது, சிவகாமியம்மை வீட்டிற்கு நேரே போனார்.

### ஆண்டவர் கிருபை செய்யட்டும்

தங்கள் வீட்டிற்கு வந்த புரோகிதரைச் சிவகாமியம்மையும் மகளும் பணிவுடன் வரவேற்று மான்றோல் ஆதனி அதன்மேல் இருக்கவைத்தனர். இதறகிடையில் பாக்கியலட்சுமி, 'சாமி, தங்கள் கையில் இருக்கும்பத்திரிகையென்னவோ" எனப் பணிவுடன் வினவ, இது இந்துசாதனப் பத்திரிகை, இதனையிப்பொழுதுதான் படிக்கும்படி கடையில் வாங்கினேம். இப் பத்திரிகைதான் இப்பொழுது எம்மை உங்கள் வீட்டிற்கு வரச்செய்தது; வேறொன்றுமல்ல, குழந்தாய், இதிலுள்ள "தேவை" என்ற இந்த விளம்பரத்தை உம்முடைய அம்மாவுங்கேட்கப் படித்துப்பாரும்" என்று சொல்லி அவ் விளம்பரத்தைச் சுட்டிக் காட்டியபடி புரோகிதர் அப்பத்திரிகையை அக்கன்னிகையிடம் நீட்ட, அவள் இரு கரங்களினாலும் விநயத்தோடு அதனைவாங்கித் தாயுங்கேட்கும்வண்ணம் வாசித்து முகமலர்ந்தாள்; வாசிக்கக் கேட்ட தாய் யோசித்தபடி நின்றாள்; "சிவகாமியம்மே, எதனையிட்டு யோசிக்கின்றாய்" என்று புரோகிதர் வினவ, "வேறொன்றையும்பற்றியல்ல, சாமி, எங்கள் மகளுக்குச் சம்மதமானால் அந்த இடத்திற்கு விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாமோ என்பதை யிட்டுத்தான் யோசிக்கிறேன்...." என்று தாய் சொல்வதற்கிடையில் "அம்மா, எனக்கு நூறுமுறையும் சம்மதம்; ஆனாலும் எங்கள் குருக்களையாவின் சம்மதமும் ஆசியும் வேணுமம்மா" என்றாள்பாக்கியலட்சுமி; சிவகாமியம்மை புரோகிதரின் முகத்தைப் பரிவுடன் பார்த்தாள்; "உங்களுடைய சுற்றத்தார், உங்களுகது அறிமுகமானவர்கள் யாராயினும் அந்தவூரிலே போய்க் குடும்பத்துடன் இருக்கிறார்களோ" என்று புரோகிதர் வினவ, "சாமீ, இந்தவூரில் இருக்கும்போது எதும் மனக் குரோதம் வேற்றுமைகளிருந்தாலும் எங்கள் யாழ்ப்பாணத்தார் வேற்று நாட்டிற் போய் வசிக்குங் காலத்திலே, இங்கிருந்து அங்கே பிறகு போகும் யாழ்ப்பாணத்தவரை அவர் யாராயிருந்தாலும் பேதம் பாராட்டாது தங்கள்சொந்தச் சுற்றமித்திரர்போல் அன்பு பாராட்டி ஆதரிக்குங் குணம் பூண்டவர்களென்று அந்நாட்டிற்குப் போய் மீண்டு இங்கே வந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம் சாமீ, ஆனதால், அதனையிட்டுக் கவலையில்லை. நாங்கள் அந்த உத்தியோகத்திற்கு விண்ணப்பம் அனுப்புவது புத்தியோ என்பதையிட்டுத்தான் நீங்கள் ஆராய்ந்து சொல்லவேணும்" என்று பணிவுடன் கேட்டாள் சிவகாமியம்மை; அப்படிச் செய்வது நல்லதென்றுதான் நாம் நினைக்கிறோம்; இந்த விஷயமாக உங்களுக்கு அநுகூலமாகுமென்பதும் என்னுள்ளத்திற் புலப்படுகிறது, நீங்கள் ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்யுங்கள்' என்றார் புரோகிதர்; "செய்கிறோம் சாமி, கருமங் கைகூடுமானால், பெண்ணைப் பிறந்த நாங்களிருவரும் தக்க துணையில்லாமல் இந்தவூரிலிருந்து அந்தத் தூரதேசத்திறகு எப்படிப் பயணம் பண்ணுவதென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன" என்று கவலையுடன் சிவகாமி சொல்ல, அதனையிட்டுக் கவலைப்படவேண்டாம், ஆண்டவன் கிருபை செய்யட்டும்; ஆன துணையோடு உங்களை நாமே அனுப்பிவைப்போம்" என்று உறுதி வார்த்தை கூறிவிட்டுப் புரோகிதர் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்கு மீண்டார்.

—வரும்.

## செய்தித் திரட்டு

வேலணை மத்திய கலாசாலைக்கயலில் புதிதாயமைக்கப்பட்ட தற்காலிகக் கட்டிடத்தில் ஓர் வாசகசாலை ஸ்ரீ க. சூரியகுமாரனால் வருகிற ஞாயிற்றுக்கிழமை 27-4-47 திறந்து வைக்கப்படும்.

* *

இலங்கையில் கப்பல் கட்டும் சமுதாயம் தன் தொ[illegible] நடத்துவதற்கு 500 லட்சம் ந[illegible]னம் தேவையெனக் கணிக்கப்ப[illegible]ருக்கிறது.

* *

சாவகச்சேரியில் உள்ள முஸ்லீம்கள் ஜனப் எம். எம். அபூபக்கர் தலைமையில் தமக்கென ஓர் சங்கம் நிறுவியுள்ளனர்.

* *

சென்னையிற் சிறையாகியுள்ள டக்ரர் கோல்வின் ஆர். டி. சில்வாவை விடுதலையாக்கவேண்டும் என்று இலங்கைச் சமதர்மக்கட்சி பண்டிதர் நேருவுக்கும், சென்னை உள்நாட்டு மந்திரிக்கும் தந்தியனுப்பியிருக்கிறது.

* *

1 கோடியே 50 லட்சம் தங்கப்பவுன் பெறுமதியான திரவியத்தை ஜேர்மன் நாஸிக்கட்சியினர் மறைத்து வைத்திருந்தனர். அதனை இப்போது போலந்துதேசத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். 3 தோன் நிறையுள்ள நாணயங்கள், தங்கம், வைரங்கள் என்பன இத்திரவியப் புதையலில் அடங்கியுள்ளனவாம்.

# திருச்சி ரேடியோ

சனி ஏப்ரல் 26

7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மதுரை வி. எஸ். சக்ரபாணி 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி. ஆர். செல்லப்பா பாட்[illegible]8 30 காலை இசை இசைத்தட்டு 9-00 [illegible]ப்பு முடிவு.

1-00 மதுரை வி[illegible] சக்ரபாணி வயலின் 1-30 ஆங்கிலத்[illegible] செய்திகள் 1-40 குரல்வகை இசைத்தட்டு 2.00 தமிழில் செய்திகள் 2.05 கே. வி. பக்கிரிசாமி பாட்டு 2-45 ஒலிபரப்பு முடிவு

5-00 கே. வி. பக்கிரிசாமி பாட்டு 5-40 பெரியபுராண விளக்கம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-00 டி. ஆர். செல்லப்பா பாட்டு 7-15 பாதை நெறி 1 பாதசாரிகளுக்கு 7-30 தமிழில்செய்திகள் 7-45 மதராவில் உள்ளபடி 9-00 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் : வானிலை (ஆங்கிலம்) 9-45 கே. ஜே. ஜோஸ் தில்ருபா 10 00 இசைவேளை இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு

ஞாயிறு ஏப்ரல் 27

7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம். எஸ். ஷண்முகசுந்தரம் பாட்டு 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி. பலராம் கோஷ்டி 8-30 வி. வேதவல்லி பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 கதம்பம் இசைத்தட்டு 12 30 தபால் மூலம் 2 சமையல் பகுதி 12-40 வெண்ணிலாவே கலைவாணன் பாடல் 12.45 கரூர் கண்டிப்பு நாடகம் 12-55 வஸந்தன் பவனி ஒலிச்சித்திரம் 1 மணி மலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்யம் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை 5 பல்லடம் வி என் ராஜன் புல்லாங்குழல் 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி வேதவல்லி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 8-30 பல்லடம் வி என் ராஜன் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9 45 தந்தி இசை 10 இசைவேளை 10-30 முடிவு.

திங்கள் ஏப்ரல் 28

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி என் சிங்காரவேலு பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8 30 எஸ் சோமளம் ஸ்ரீநிவாஸ் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ராஜரத்தி பாட்டு 2-15 கோடைக்கல்வி 2.45 முடிவு

மாலை 5 டி என் சிங்காரவேலுபிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 இந்தியாவும் தென்கிழக்காசியாவும் 8 கோமளம் ஸ்ரீநிவாஸ் பாட்டு 8-30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 இருகுரலிசை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 இசைக்கற்பனை 10 இசைவேளை 10-30 முடிவு

செவ்வாய் ஏப்ரல் 29

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பாலம் ராமமூர்த்தி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை 8-30 ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1:30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 2 15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 பாலம் ராமமூர்த்தி பாட்டு 5-30 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7-15 இன்பம் எங்கே நாடகம் 7 30 தமிழில் செய்திகள் 7-45 ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நீலம்மா கடம்பி வீணை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 எஸ் பாலகிருஷ்ணன் வயோலா 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

## துன்னாலை வடக்கு வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு:

சனம் ஐயா,

தங்கள் சாதனம் 25.3-47 பிரசுரத்தில் குறித்த வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோயில் சம்பந்தமான விளம்பரமொன்று காணப்பட்டது. அவ் விளம்பரத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் ஒன்றேனும் யதார்த்தத்தில் நிகழவேயில்லை. குறித்த விளம்பரப்படி குறித்த கோயிலில் குறித்த திகதியில் எவ்வித கூட்டமும் நடைபெறவில்லை. எவ்விதமான கூட்டத்தைப் பற்றிய அறிவித்தல் எதும் குறிப்பிட்ட காலத்தில் குறித்த கோயிலைச் சேர்ந்த மகாசனங்களுக்குக் கொடுபடவில்லை. மேற்படி ஆலயபரிபாலன அதிகாரத்தை அபகரிக்கும் நோக்கமாய்க் குறிப்பிட்ட ஒரு சிலரின் சூழ்ச்சியாலேயே அவ்விளம்பரம் தங்கள் பத்திரிகையில் வெளியாயிற்று. குறித்த கோவிற் பரிபாலன விஷயமாக இவர்கள் எதாவது சாதனம் நிறைவேற்றினால், குறித்த இக்கோயிலைச் சேர்ந்த மகாசனங்களாகிய நாங்கள் அங்கீகரிக்க மாட்டோமென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றோம்.

இங்ஙனம்

ஷை கோயில் மகாசனங்களின் சார்பாக

1 சி. க. சின்னத்தம்பி துன்னாலை
2 சு. சிதம்பரப்பிள்ளை துன்னாலை
3 ஆ. சிதமபரப்பிள்ளை துன்னாலை
4 K. Chelliah Karaveddy
5 சி. சிவசம்பு

M 13 22—25-4-47


உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ் வங்கி

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.12 2-8—31 7-47) (F)



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to, 1—4—48



## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

# சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைததுக் கடைசியன்று சீயக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், மூரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தாவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம். சீசா மூதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம.

Std. 9 1.11-46—30-4-47 (வெ)



# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்,

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, April, 25 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org